குறுந்தொகைக் காட்டும் களவுக் காலமும் பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களும்

முனைவர் அ. கலைச்செல்வி
இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை
திரு.ஆ.கோவிந்தசாமி அரசு கலைக் கல்லூரி
திண்டிவனம், விழுப்புரம் மாவட்டம்

இருபதாம்நூற்றாண்டின்பிற்பகுதியில்பல பின் நவீனத்துவ கோட்பாடுகள் தோன்றின. அவற்றுள் ஒன்று பெண்ணியமும் ஆகும். ஆண் பெண் என்ற எதிர்ப்பாலினம் ஒன்றை ஒன்று சார்ந்து வாழும் சுழலைத் தாண்டி ஆண் அடக்குவதும் பெண் அடங்குவதுமான கொள்கை மிக தீவிரமாகப் பெண்ணை சுற்றி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தப் போக்கை இலக்கியங்களும் பதிவு செய்துள்ளன. பருவ வயதில் ஆணுக்கும் பெண்ணுக்கும் உண்டாகும் காதல் உணர்ச்சி களவாக மாறும்பொழுது ஆணுக்கு அது இயல்பானதாகவும் பெண்ணுக்குச் சிக்கலானதாகவும் இருக்கிறது. இதனைப் பெண்ணிய அணுகுமுறையில் எடுத்துரைக்க, இலக்கிய வகைப்பாடுகளுள் காலத்தால் முந்தியதான சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான குறுந்தொகைப் பாடல்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. எனவே இக்கட்டுரைக்குக் ''குறுந்தொகைப் பாடல்கள் காட்டும் களவுக் காலமும் பெண்கள் எதிர் கொள்ளும் சிக்கல்களும்'' எனத் தலைப்பு அமைகிறது.

*பெண்ணியம் என்பதற்கு பல வரையறைகள் உருவாக்கியுள்ளன. பெண்ணியம் என்பது பல்வேறு கோட்ப்பாடுகளைப் போல, பெண்ணியவாதத்தின் தத்துவார்த்தை அல்லது கருத்தில் ரீதியான தளத்தை ஒரு தனிப்பட்டக் கோட்பாட்டின் தொகுப்பிலிருந்து பெற்றுக்கொள்ளவில்லை. எனவே அனைத்து பெண்களுக்கும் எல்லா காலங்களிலும் பொருந்தக்கூடிய ஒரு பொதுவான வரையறையை இதற்கு சொல்ல இயலாது எனவே பெண்ணியம் ஸ்தூலமான வரலாற்றுக் கலாச்சார நடைமுறைகளிலும், பார்வைகள், உணர்வுகள, செயல்பாடுகளின் நிலைகளிலும் தளம் கொண்டிருப்பதால் இதன் வரையறையானது மாற்ற மடைய கூடும் மாற்றம் அடையவும் செய்யும். (சண்முகம், சு., 1994:9) பெண்ணியம் பெண்களுக்கான உரிமைகளை பெற்றுத் தருவது மட்டுமல்ல சமுகத்தையே மாற்றி அமைக்க முயல்வதாகும். (பிரேமா, 1994:3) பெண்ணியத்தின் கரு பெண்களின் ரத்தத்தில் உள்ளது இதன் கொள்கை நமது இனத்தின் இதயத்தில் உள்ளது. (*Juliet Mitchell and Ann Oakley,1985:25*)*

பெண் என்பவள் ஆணைப்போல சமுகத்தில் சமநிலை பெற வேண்டும் என்பதையே பெண்ணியம் வெளிப்படுத்துகின்றது எனலாம். சங்க இலக்கியங்களும் காப்பியங்களும் பெண்களின் கற்பின் திறம் பற்றியும் அதன் முலம் பெண்கள் கற்பை தங்கள் தனிப்பெரும் குணமாக போற்றிக் கடைபிடிக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்துகின்றன. பெண்களுக்கு உரியதாக தனி பெரும் குணமாக கற்பை வலியுறுத்தியதை போல ஆண்களுக்கு வலியுறுத்தவில்லை. ''கற்பெற்றுசொல்லவந்தால் அதை இரு கட்சிக்கும் பொதுவில் வைப்போம்'' என்ற பாரதியின் கூற்று இங்கே நினைவு கூறத்தக்கதாகும்.

இனி ஆய்வுப் பொருள் நோக்கி, குறுந்தொகையில் குறிஞ்சித்திணைப்

பாடல்களே தொகையில் கூடியனவாகும், புணர்தல் ஒழுக்கம் பற்றிய பாடல்கள் பாடற் பொருளமைதியைச் சிறப்பிக்கின்றன. (மனோண்மணி சண்முகதாஸ்,2000:1390) தமிழில் களவும்,கற்புமாகப் பிரிந்துகிடக்கும் அகப்பொருள் பற்றி, தமிழில் எழுத பல இலக்கண நூல்கள், இலக்கணம் கூறுகின்றன.

"மக்கள் நுதலிய அகனைந் திணையும்
சுட்டி யொருவர் பெயர்கொளப் பெறாஅர்"
(தொல். பொருள். அகத். நூ. 54)

என்ற தொல்காப்பிய நூற்பாவிற்கு நச்சினார்க்கினியர் பின்வருமாறு உரை தந்துள்ளார்.

ஒத்த அன்பால் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம் அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவருக்கொருவர் தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப் படாததாய், யாண்டு உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்புறுவதோர் பொருளாதலின் அதனை அகம் என்றார். எனவே அகத்தே நிகழ்கின்ற இன்பத்திற்கு அகமென்றது ஓர் ஆகுபெயராம். இதனை ஒழிந்தன, ஒத்த அன்புடையார் தாமேயன்றி எல்லோருக்குந் துய்த்துணரப் படுதலானும், இவை இவ்வாறிருந்ததெனப் பிறருக்கு கூறப்படுதலானும் அவை புறமெனவே படும். (தொல். பொருள். (நச்சினார்க்கினியம்), ப. 3.)

அகம், புறம் என்னும் இருதிணை வடிவமைந்த பொருளிலக்கியம் இன்றும் அறிவுலகிற்கு புதியது என அறிஞர் மொழிகுவர். (மாணிக்கம், வ.சுபா., 19) கைக்கோள் மரபான களவு, கற்பு என்னும் இரண்டனுள் ஒன்றான களவுக்குத் தொல்காப்பியர் களவியலில்,

"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்போடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
காமக் கூட்டம் காணும் காலை
மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்
துறை அமை நல் யாழ் துணைமை யோர்
இயல்பே"

என்று இலக்கணம் கூறுகிறார். களவென்பதற்கு இளம்புரணர், களவு என்பது அறம் அண்மையின் எனின் அற்றன்று, களவை எனும் சொல் உண்டுழி எல்லாம் அறத்தின்பாற் படாது என்றல் அமையாது. களவாவது பிறர்க்குரிய பொருளை மறையில் கோடல் இன்னதன்றி ஒத்தாரும் மிக்காரும் பொதுவாகிய கன்னியரை தமர் கொடுப்பக் கொள்ளாது கன்னியர் தாம் இச்சையினால் தாமரை மறைத்துப் புணர்ந்து பின்னும் அறநிலை வழாமல் நிற்றால் இஃது அற மனவே படும். என்றும், நச்சினார்க்கினியர்,

பிறர்க்குரித்தென்று இருமுது குரவரான் கொடை எதிர்ந்த தலைவியைஅவர் கொடுப்பக் கொள்ளாது, இருவரும் கரந்த உள்ளத்தோடு எதிர்பட்டுப் புணர்ந்த களவாதலின் இது பிறர்க்குரிய பொருளை மறையிற் கொள்ளும் களவு அன்றாயிற்று. இது வேதத்தை மறைநூல் என்றார் போல கொள்க என்றும் விளக்கம் கூறுகின்றனர். களவியில் நிகழும் கிளவிகளாகத் தொல்காபியர் பின்வரும் நான்கைச் செய்யுளியலில் (தொல். செய். நூ. 179.) கூறியுள்ளார்.

1. காமப் புணர்ச்சியாகிய இயற்கை புணர்ச்சி
2. இடந்தலைப்பாடு
3. பாங்கர் கூட்டம்
4. பாங்கியர் கூட்டம்

குறுந்தொகையில் குறிஞ்சித்திணைப் பாடல்களே தொகையில் கூடியனவாகும், புணர்தல் ஒழுக்கம் பற்றிய பாடல்கள் பாடற் பொருளமைதியைச் சிறப்பிக்கின்றன. (மனோண்மணி சண்முகதாஸ், 2000:1390) காமப் புணர்ச்சியாகிய இயற்கைப் புணர்ச்சியால் பெண்கள் அடையும் அவலநிலையைப் பின்வரும் பாடல்களால் அறியலாம். இயற்கை புணர்ச்சியின் இறுதியில் பிரியலுற்றத் தலைவனை மீண்டும் கூடுவோமோ என்று ஐயுற்று கவலைப்பட்டத்

தலைவியை, அவன் வற்புறுத்தி,

"யாயும் ஞாயும் யாராகியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம்தாம் கலந்தனவே"

(குறுந்.40.)

என்று அவள் மீது தனக்கிருக்கும் அன்பினை வெளிப்படுத்தித் தேற்றுகிறான்.

குறுந்தொகை 25-ஆவது பாடல், தலைவன் கள்வனைப் போல வந்து என்னுடன் கூடிச் சென்ற பொழுது யாரும் அங்கு இல்லை. இந்நிலையில் அத்தகையவன் பொய் சொல்வானே ஆனால் நான் செய்யத்தக்கது என்ன? இடையறாது ஒழுகும் நீரில் உள்ள தினைத் தாளைப் போன்ற சிறிய பசிய கால்களை உடைய ஆரல் மீனை கௌவி உண்ணப் பார்த்திருந்த "குருகு முண்டுதா மணந்த ஞான்றே" அது சாட்சியாகுமா? என்று தலைவி புலம்புவதைக் கூறுகிறது.

குறுந்தொகை 26-ஆவது பாடல் தலைவி, தலைவன் ஒழுக்கமற்ற கீழ் மகனைப் போல தீங்கு விளைவிக்க கூடிய பொன்மொழிகளைக் கூறினாலும் அவனது களவு ஒழுக்கத்தைக் கண்ணால் கண்டு அறிந்தவர், தாம் பொய் சொல்வது அறம் ஆகாது. இனிய மாங்கனியை உண்ணும் கூரிய பற்களை உடைய சிவந்த வாயை உடையதாய் மலையிடத்தில் விளையாடும் வலிய குட்டிக்கு தந்தையான ஆண் குரங்கும் அறியும் அக்கொடியவனை என்று வருந்துவதாக கூறுகிறது. மேற்கண்ட இரண்டு பாடல்களும் இயற்கைப் புணர்ச்சிக்குப் பின் விரைந்து வந்து மணந்து கொள்வேன் என்று சூளுரைத்துச் சென்ற தலைவன் பிரிவு நீடித்தக் காரணத்தால் தன் தோழியுடன் தன் நிலைக்கு வருந்தி புலபுவதைக் காட்டுகின்றன.

குறுந்தொகை 51-ஆவது பாடல், மணந்துகொள்ள உடன்படாது களவொழுக்கம் புரிந்துநின்ற தலைவன் சிறைப்புறத்தான, அவனை மணம்செய்துகொள்ள வேண்டி தலைவி, தோழிக்குச் சொல்வதுபோல அவனுக்கு உணர்த்தியது, "வளைந்த முட்களை உடைய கழிமுள்ளியின் பெரிய மலர்கள் காற்றினால் சிதறுண்டு கோர்த்த நூல் அறுபட்டு சிந்திய முத்துக்களைப் போல நீர் துளிகள் தோறும் சுழ்ந்து கிடக்கும் வெள்ளிய மணலை உடைய கடற்கரையை உடைய தலைவனிடத்தில் யான் காதல் கொண்டவளாக இருக்கின்றேன். என் தாயும் மிகக் கொடியவள், என் தந்தையும் கொடியவர், ஊரில் உள்ளவர்களும அம்பல் மொழிதலை விரும்பி உரைக்கல்லுற்றார். இவற்றையெல்லாம் அவனுக்குச் சொல்வாயாக". தமிழ்ச் சமூகத்தில் மணமாவதற்கு முன் நிகழும் பாலுறவு மதிக்கத்தக்கதாக இல்லை. அது பெண்களுக்கு ஏமாற்ற உணர்வையும் அச்சத்தையும் உண்டாக்குகிறது. ஆனால், ஆண்களுக்கு புணர்ந்து இன்பம் துய்ப்பதிலே மீண்டும் நாட்டம் இருக்கிறது.

இதைப் பின்வரும் குறுந்தொகை 29 ஆவது பாடல்கள் காட்டுகிறது. தலைவியை சந்திப்பதற்கு இரவுக்குறி மறுக்கப்பட்டதால் தலைவன் உடனே வரைந்து கொள்வதற்கு உடன்படாது பின்னும் களவு ஒழுக்கத்தையே விரும்பி மேற்கொண்டு நின்ற தன் நெஞ்சுக்கு இவ்வாறு கூறுகிறான். நல்ல சொற்களை விட்டு புல்லிய சொற்களில் படர்ந்து மழை நீர் எதிரே வைக்கப்பட்ட பச்சை மண் கலத்தைப் போல, உள்ளம் தாங்க மாட்டாத துயரக் கடலில் அகப்பட்டுத் தத்தளித்து, நெஞ்சம் அழிந்து அரியதான வருத்தத்தை உற்றாய். என் நெஞ்சே, கேள், உன் ஆரவாரம் மிகவும் பெரியதாக இருக்கிறது. உயர்கோட்டு மகவுடை மந்தி போல, உன்ன அகனுறத் தழுவிக்கொண்டு உன் குறையைத் தீர்ப்வரையும் பெறவில்லை கேட்பவரையும் பெறவில்லை. வீணாக வருந்திப் புலம்புவதில் பயனென்ன? என, சமாதானப் படுத்தியும் சமாதானம் அடையாது பின்னும் அவளிடம் செல்லத் தன்நெஞ்சு தூண்டப் புலம்புகிறான்.

ஆண்கள் மணத்திற்கு முன் நிகழும் புணர்ச்சி இன்பத்தில் விருப்பம் உள்ளவர்களாக இருப்பது மட்டுமன்றி அதனால் எழும் அலருக்கும் அவர்கள் அஞ்சவில்லை. அலறெழுந்த பின்னும் மணந்து கொள்வதற்கு என்னாது இரவு குறி வேண்டி வந்த தலைவனுகத் தோழி இசைந்தது போல மறுத்து கூறும் குறுந்தொகை 42-ஆவது பாடல்,

"காம மொழிவ தாயினும் யாமத்துக்
கருவி மாமழை வீழ்ந்தென அருவி
விடரகத் தியம்பு நாட எந்
தொடர்புந் தேயுமோ நின்வயினானே"

இதன் பொருள்,மழை பெய்தவுடன் அருவிகள் முழையகத்து முழங்கும் என்றதனால் இரவின்கண் இரவில் உலகம் உய்ய காரணமாகிய பெரிய மழை பெய்தவுடன் அருவிகள் மலையின் முழையகத்துப் பாய்ந்து ஒலிக்கும் மலைநாடனே, காமம் விடத்தக்க ஒன்றாயினும் உன்னிடத்தில் எங்களுக்குள்ள பற்றும் குறையுமோ? என்பதாகும். இப்பாடலில் வரும் இறைச்சி பொருள், இரவில் தலைவன் தலைவியோடு களவில் கூடித் தலையளி புரிந்தது ஊரு ரெங்கும் அலராய் வெளிப்பட்டுவிட்டது எனக்குறித்தவாறாம்.

பாலியல் விருப்பங்கள் இயல்பாகவே ஓர் உயிரை பிற உயிர்களுடன் இருக்கமாக உறவு கொள்ளும்படி தூண்டுகின்றன. மனித இனத்திற்கும் அப்படியே. இதனால் ஆணும் பெண்ணும் இணைந்து இன்ப நுகர்ச்சியில் ஈடுபடுகின்றனர். இக்களவொழுக்கம் பெண்ணுக்கே சிக்கலைத் தருகிறது. ஆணுக்கு அல்ல. மாறாக ஆணின் பாலியல் வேட்கை மிகுப்பட்டவதையே பாடல்கள் காட்டுகின்றன.

வீரம் தலைமை தாங்கும் பண்பு முதலியவை ஆணுக்குரியவை என்றும் அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு என்பவை பெண்ணுக்குரியவை என்றும் பாகுபடுத்திய தன் மூலம் பெண்ணுக்கு என்று பாகுபடுத்தப்பட்ட இயல்புகளும் அதைச் சார்ந்த கடமைகளும் சமூக மதிப்பீட்டில் தாழ்ந்தவை ஆணுக்குரிய இயல்புகளும் அதைச் சார்ந்த கடமைகளும் உயர்ந்தவை என்ற ஏற்றத்தாழ்வுகள் சமூகத்தில் ஆண் பெண் இனத்தாரக் கிடையே ஏற்றத்தாழ்வுகள் நடைபெற காரணமாய் உள்ளன. சங்க இலக்கியங்களும் காப்பியங்களும் பெண்களின் கர்ப்பிணி திறம் பற்றியும் அதன் மூலம் பெண்கள் கற்பித்தங்கள் தனிப்பெரும் குணமாக போற்றி கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்து கின்றன. எனினும் அவை பெண்களுக்கே உரிய தனிப்பெரும் குணமாகிய கற்பை ஆண்களும் கடைபிடிக்க வேண்டுமென வலியுறுத்தவில்லை. மாறாக ஆண்களுக்குப் பாலியல் சுதந்திரத்தையே அளிக்கிறது. (கலைச்செல்வி,அ., 2006:68)

களவுக் காலத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் அவர்களுக்கு, நிகழ்கால மற்றும் எதிர்கால வாழ்க்கையின் மீது நம்பகத்தன்மையை இழக்கச் செய்யும் சுழலை உருவாக்குகிறது.

சமுதாயத்தில் பாலுணர்வு குறித்த அறக்கவலை பெண்ணுக்கானதாக இருப்பதும், குடும்ப கௌரவம் மொத்தமும் பெண்களால் காக்கப்பட வேண்டிய ஒன்றாக கட்டமைக்கப்பட்டிருப்பதும், கற்பென்னும் மரபு அல்லது ஒழுக்கம் பெண்ணுக்கு உயர்வானதாகக் கற்பிக்கப்பட்டிருப்பதும். இயற்கையில் உயிரியல் அடிப்படையில் கருவுறுதல் என்பது பெண்களுக்கே உரியதானதாக இருப்பதும், பெண்ணை, எப்பொழுதும் அச்சமடையச் செய்கிறது.

சமூகம், பொருளாதாரம், சமயம், அரசியல், பண்பாடு, மொழி அன்ன பிறயாவும் ஆண்களால் ஆண்களுக்காகக் கட்டமைக்கப்பட்டவைகளாக இருக்கும் நிலையில், பெண்களுக்காணதாக இருப்பது தாயாக, மகளாக, மனைவியாக என்பன மட்டும். மகளாகப் பிறந்த வீட்டுக்குப்

பெருமை தேடுவதும், நல்ல மனைவியாக புகுந்த வீட்டிற்கும் பிறந்து விட்டிருக்கும் நட்பேறைத் தேடி தருவதும், நல்ல தாயாக குழந்தைகளை பெற்றெடுத்து நல்ல நல்ல என்ற குணங்களை உடைய பிள்ளைகளாக வளர்த்துத் தந்தைக்குக் கொடுப்பதும் பெண்களுக்கான கடமைகள் ஆகும். இறக்கும்வரை ஆணுக்காகவே அடங்கி வாழ்வது. இவைதான் பெண்களுக்கானவையாக இருக்கின்றன.

துணைநூற்பட்டியல்

1. தொல்காப்பியம், பொருளதிகாரம், நச்சினார்க்கினியம், கழக வெளியீடு, சென்னை.
2. அறவேந்தன், இரா., (ஆராய்ச்சியும் பதிப்பும்), குநற்தொகை, நியுசெஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட்., அம்பத்தூர், சென்னை - 600 098, 2016.
3. கலைச்செல்வி, அ., பெண்ணிய நோக்கில் கதைப்பாடல்கள், வாகை, எண்.27, கிழக்குக் கடற்கரைச் சாலை, கணபதிச்செட்டிக்குளம், புதுச்சேரி - 605 014, 2006.
4. மனோண்மனி சண்முகதாஸ், குறுந்தொகை - ஒரு நூண்ணாய்வு, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சி.ஐ.டி.வளாகம், தரமணி, சென்னை - 600 113, 2000.)
5. தமிழண்ணல், தொல்காப்பியம், பொருளதிகாரம், மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, சென்னை - 600 108.
6. மாணிக்கம்,வ.சுப, தமிழ்க்காதல், பாரிநிலையம், பிராட்வே, சென்னை - 600 001, 1980.
7. Oakley Ann and Mitchell Juliet, what is Feminism, Basil Blackwell, Oxford 1986.